தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல், 23

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கல்லூரிகளில் கூட்டுறவு பொது சமையற்கூடங்கள்

*வினா எண். 774—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் கூட்டுறவு 'பொது சமையற்கூடங்கள' முறை அமுல்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் எத்தனை கல்லூரிகளில்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) கல்லூரிகளில் பொதுச் சமையற்கூட முறை அமுல் படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 28 கல்லூரிகளில் இக்கூடங்கள் துவக்கப் பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 28 பொது சமையல் கூடங்களை துவக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடங்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொர்ணம் அவர்களிடத்தில் நான் கொடுத்துவிடுகிறேன்.